# எம் அதிசயம்

அம்மா பிறந்தபோது எவரும் நம்பவில்லையாம்
மானிப்பாய் அதிஉயர் வைத்தியர்கள்கூட
நன்றி அந்தோனியாப்பிள்ளை ஆச்சிக்கு
எமக்கு அம்மாவைத் தந்ததற்கு

கைவிட்ட அந்தக் கல்தான்
வீட்டிற்கு முதற் கல்லானது
எழுபது அகவை கண்டது
நன்றி அனைத்து உறவுகளுக்கும்

உங்கள் உறவுகளில் முன்மாதிரி நீங்கள்
அனைவர் மேல் நீங்கள் காட்டிய பரிவும் பாசமும்
எம்மையும் உங்கள்போல் உருவாக்கியதோ
நன்றி அம்மா உங்கள் தாராள அன்பிற்கு

எம் தலைக்கு எண்ணெய் ஊற்ற
நீங்கள் கிணற்றையும் நெல்லியையும் சுற்றியது
இன்றும் எம் நெஞ்சில் நிழலாடுகிறது
அந்த ஓட்டம்தான் இன்று ஆட்டுகின்றதோ

இப்போது தெரிகிறது எமக்கு
ஐயாவைப்போல் நாம் ஆகக்கூடாது என்பதுதான்
உங்கள் தவமாக இருந்துள்ளது
தலையைத்தான் சொல்கிறேன்
அண்ணனைக் கலைக்காதது
இன்று அவரில் தெரிகிறது

எமக்கு உங்களில் ஒரு பொறாமை
உங்கள் மக்களிலும் பலமடங்கு பாசம்
உங்கள் மருமக்களில், பேரர்களில்
அம்மா இது எங்கும் காணாத அதிசயம்

என் நண்பர் கேட்டார் மாஸ்ரர் குடும்பத்தில்
தமிழ் கவியாக வாழ்கின்றதே என
நான் சொன்னேன் அது எமக்கு
அம்மாவின் கவளச்சோறு தந்த தமிழ் என

இன்னுமொருவர் கேட்டார் மாஸ்ரர் குடும்பத்தில்
இறையுணர்வு இப்படி வாழ்கிறதே என
நான் சொன்னேன் அது எமக்கு
ஐயா அன்புடன் தட்டி எழுப்பிய இறையுணர்வு என

வேறொருவர் சொன்னார் சுகிர்தம் பிள்ளைகள்
என்றுமே நேரம் தவறாது என
தலை வணங்குகிறோம் அம்மா உங்கள் கண்ணியத்தை
உங்கள் வளர்ப்பில் வெள்ளையர்களே வியக்கின்றனர்

அம்மா!

நம்பிக்கையின் பேத்தி நீங்கள்
பரிபூரணத்தின் மகள் நீங்கள்
வெற்றியின் மருமகள் நீங்கள்
முத்துக்களின் சோதரி நீங்கள்
சிங்கத்தின் துணைவி நீங்கள்
எங்களின் முழு அன்பு நீங்கள்
இதைவிட வேறு என்ன வேண்டும்!

எமது பிறந்த நாட்களையெல்லாம் நாம் மறந்தாலும்
என்றும் மறக்காத எம் அன்னைக்கு
எழுபது கோடி முத்தங்கள்!

அன்பு மகன் கமிலஸ் குடும்பம்